

அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (30.04.2025) கோடம்பாக்கம் மண்டலம், சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில், வார்டு 139, அண்ணாமலை நகர், 3வது தெருவில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.35.40 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட குழந்தைகள் மையக் கட்டடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., எம்.கிருஷ்ணமூர்த்தி, ப.சுப்பிரமணி எம்.சி., வட்டச் செயலாளர் சை.மு.சேகர், களக்காடி எல்லப்பன் மற்றும் கழக நிர்வாகிகள், அலுவலர்கள் உள்ளனர்

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 70 வது நாள்!

## வில்லிவாக்கத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, மே 1 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 70 ஆம் நாளான கழகத்தலைவர் முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (30.4.2025) வில்லிவாக்கம் கிழக்கு பகுதி: 1) வட்டம் 98 அ குட்டியப்பன் தெரு, முருகன் கோவில் அருகில் மற்றும் 2) வட்டம் 98 புதுநகர், சென்னை ஆகிய பகுதிகளில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை





அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் அ. வெற்றி அழகன், வே.வாசு, கூ.பீ.ஜெயின், லதா வாசு எம்.சி, டி.வி.செம்மொழி எம்.சி, சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன் எம்.சி, வானவில் விஜய், வட்ட கழக செயலாளர்கள்: எ.வேதா, சீ.விக்னேஷ், ச.மனோகரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, சிட்கோ சேகர், ஆர்.தீனதயாள், க. சுகுமாரன், மா.அகிலன், உமாசங்கர், சொ.முருகேசன், ப.லோகுபாபு இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ராஜன், அபரஞ்சி, அசோக் ஜெயின், விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### ஜே.ஜே.எபினேசர் முன்னிலை ! டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. பங்கேற்பு !

# ஆர்.கே.நகர் மேற்கு பகுதியில் வட்டந்தோறும் நீர் மோர் பந்தல் !

## ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, திறந்து வைக்கிறார் ! எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் வேண்டுகோள் !

சென்னை, மே 1 -

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதியில் உள்ள வட்டங்கள் தோறும் கோடைவெயில் தாக்கத்தை தணிக்கும் வகையில் நீர், மோர் பந்தல் இன்று (01.05.2025 வியாழக்கிழமை) காலை 10.00 மணியளவில் திறக்கப்படுகிறது.

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதியில் வட்டங்கள் தோறும் தண்ணீர் பந்தல் திறப்பு நிகழ்ச்சி கோடைக்காலத்தில் மக்களின் வெப்ப தாக்கத்தை தணிக்கும் விதமாக கீழ்க்கண்ட இடங்களில் தண்ணீர், நீர்மோர் பந்தல் அமைக்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

ஆர்.கே.நகர் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, முன்னிலையில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, பங்கேற்பில் மாவட்ட கழக பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, திறந்து வைக்கிறார்.

ஆர்.கே.நகர் மேற்கு பகுதி கழகம் சார்பில் தலைமை: பகுதி கழக செயலாளர் எஸ். ஜெபதாஸ் பாண்டியன் இடம்: மணலி சாலை, கொருக்குப்பேட்டை, சென்னை600021. 38வது வட்டம் தலைமை : வட்ட கழக செயலாளர் நேதாஜி யு.கணேசன் எம்.சி, இடம்: பவர் ஹவுஸ் பேருந்து நிலையம், தண்டையார் பேட்டை, சென்னை600081. 38(அ) வட்டம் தலைமை : வட்ட கழக செயலாளர் எஸ். எல்.சுந்தர், இடம்: ஐஓசி பேருந்து நிலையம், தண்டையார் பேட்டை, சென்னை_600081. 41வது வட்டம் தலைமை : வட்ட கழக செயலாளர் கி.தேவன் இடம்: கார்னேஷன் நகர் (மாநகராட்சி பள்ளி அருகில்) கொருக்குப்பேட்டை, சென்னை_600021. 41(அ) வட்டம் தலைமை : வட்ட கழக செயலாளர் ஆர்.ஏ.எம். சசிக்குமார் இடம்: எழில் நகர் பி_பிளாக், சென்னை600118. 47வது வட்டம் தலைமை: வட்ட கழக செயலாளர் ஜி. ஏழுமலை, இடம்: மீனம்பாள் நகர் மேம்பாலம் அருகில், சென்னை600021. 47(அ) வட்டம் தலைமை: வட்ட கழக செயலாளர் எம்.பி.ஆர். ராஜன் இடம்: கே.என்.எஸ் டிப்போ அருகில், கொருக்குப் பேட்டை, சென்னை600021. நீர் மோர் பந்தல் திறப்பு நிகழ்ச்சியில் பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர், மாவட்ட பிரதிநிதி, பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், இளைஞர் அணியினர், மகளிர் அணியினர், பாக முகவர்கள், சார்பு மன்ற நிர்வாகிகள், பாக பணியாளர்கள், கழக மூத்த முன்னோடிகள் என அனைத்து கழகத்தினரும் திரளாக கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு பகுதி செயலாளர் எஸ் ஜெபதாஸ்பாண்டியன் கலந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### தா.வ.மு.கஜேந்திரன் ஏற்பாடு ! டி.ஆனந்த் தலைமை !

# 39(அ) வட்ட கழகம் சார்பில் தண்ணீர் பந்தல்!

## ஆர்.டி.சேகர் திறந்து வைக்கிறார் ! கலாநிதி வீராசாமி – ஜே.ஜே.எபினேசர் – இரா.லட்சுமணன் பங்கேற்பு !

சென்னை, மே 01

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 39(அ) வட்ட கழக திமுக சார்பில் நீர்மோர் மற்றும் தண்ணீர் பந்தல் திறப்பு விழா இன்று (01.05.2025 வியாழக்கிழமை) காலை 10.00 மணியளவில் தமிழ் நாடு டவர், திருவொற்றியூர் நெடுஞ்சாலை அருகில் நடைபெறுகிறது.

வட்டச்செயலாளர் தா.வ.மு.கஜேந்திரன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் டி. ஆனந்த் தலைமையில் நடைபெறுகிறது. வி.ரமேஷ், வி.முத்து, எம்.சுரேஷ்குமார், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, சென்னை வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, பகுதிச்செயலாளர் இரா.லட்சுமணன், ஆகியோர் நீர்மோர் பந்தல் மற்றும் தண்ணீர் பந்தல் திறந்து வைக்கின்றனர்.

மற்றும் மாநில நிர்வாகிகள் பகுதி கழக நிர்வாகிகள் வட்ட நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பாக முகவர்கள் கழக தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வட்டச்செயலாளர் தா.வ.மு.கஜேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

### பொ.து.ராஜா தலைமை ! ஜே.ஜே.எபினேசர் இரா.லட்சுமணன் முன்னிலை !

# 43வது வட்ட தி.மு.க. சார்பில் தண்ணீர் பந்தல் !

## மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் திறந்து வைக்கிறார் !

சென்னை, மே 01

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 43வது வட்ட கழக திமுக சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா இன்று (01.05.2025 வியாழக்கிழமை) காலை 10.00 மணியளவில் ஜீவரத்தினம் சாலை, கும்மாளம்மன் கோவில் மாவுமில் அருகில் நடைபெறுகிறது.

வட்டச்செயலாளர் பொ.து.ராஜா தலைமை வகிக்கிறார். சென்னை வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, பகுதிச் செயலாளர் இரா. லட்சுமணன், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ, கலந்து கொண்டு தண்ணீர் பந்தலை திறந்து வைக்கிறார்.

எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், பவித்ராநரேஷ்குமார் எம்.சி, ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.

மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பவளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், மகளிர் அணியினர் மற்றும் கழக தோழர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வட்டச்செயலாளர் பொ.து.ராஜா கேட்டுகொண்டுள்ளார்.



இராயபுரம் மேற்கு பகுதி 52வது வட்டத்தில் நீர்மோர் பந்தல் திறப்பு விழா வட்ட செயலாளர் எஸ்.புகழேந்தி தலைமையில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, ஆகியோர் திறந்து வைத்தனர். வ.பெ.சுரேஷ், இரா.செந்தில்குமார், ந.மனோகரன், ஆர்.வி.லட்சுமிவேல், கொரியர் முருகன், எம்.எல்.ரவி, பாலாலட்சுமணன், ஜெ.கௌரிஸ்வரன், கட்பீஸ் சோமசுந்தரமூர்த்தி, வெ.சு. சத்தியநாராயணன், எம்.கே.இஸ்மாயில், மலையம்மாள், கு.ரமேஷ், எஸ்.திருஞானம், ஏ.சாந்தகுமார், லாரன்ஸ், மலர், இளங்கோவன், ஆ. வேளாங்கன்னி, எம.பன்னீர்செல்வம், கார்த்திகேயன், வினோத்குமார், கயல்விழி, சுரேகா, எம்.தனஞ்செழியன், ராஜன், சுரேஷ், கார்த்திகேயன், ஹரிகிருஷ்ணன், கோ.வேல்மணி, புருஷோத்தமன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# எழுச்சியின் பிறந்த நாள்; இனிய தமிழ் சிறந்த நாள்!



மதுச்சேரி என்றுபலர்
மகிழ்வுடன் அழைக்கின்ற
புதுச்சேரி, உண்மையில்
புவியதிரும் புரட்சிதான்
உதித்தபெரும் பிரான்செனும்
உயர்நாட்டின் உணர்வுதான்
குதித்தேறிப் பரவிய
கொள்கையர் பலர்கூடி
வதிந்த ஊர்; அவ்வெண்ணம்
வண்ணமாய் வரலாறாய்ப்
பதிந்தவர் நெஞ்சிலே!
பாரதி தாசனென
உதித்தவர், புரட்சியின்
உருவமான கவிஞரவர்!
துதித்திருந்த பழமையெலாம்
சுட்டெரித்துப் பாட்டிலே
கொதித்தெழுந்த
சொற்களால்
கொள்ளைவனப்பு அழகிடப்
புதிதுபுதி தாய்ப்புரட்சிப்
பாடல்கள் புனைந்தவர்!
மதியொன்றே மேலாகும்
மற்றவை கீழ்என்று
விதிசெய்த பெரியாரின்
வீதியில் நடந்தாலும்
துதிசெய்து பழக்கமிலாத்
தன்மானத் தோன்றலவர்!

கதியற்ற சமுதாயக்
காரிருள் அறியாமை
பதிவின்றி அழிவதற்குப்
பாடியவை
இன்றுவரை
அதிர்வேட்டாம், அடியோடு
அகற்றுகின்ற
அனற்குண்டாம்!

சாதிமதம் வெளுத்தவற்றின்
சாயத்தைப் போக்கியே
ஓதினாய் பகுத்தறிவு
தன்மானம் ஒவ்வுமென!
நீதியிலா நால்வருணம்
நிறுவிய சனாதன
வேதியர் கூட்டத்தின்
வேரறுக்கப் பாடியவை,
காதிலே பூச்சுற்றும்
கயவர்பின் போகாமல்
சூதிலே வல்லவர்பின்
தொடர்ந்துதான் சுற்றாமல்
தீதிலா தென்றுமே
செவ்வழி காட்டுபவை;
ஆதலால் அவர்பாட்டு
ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டு!
காதலால் இளைஞரிடம்
கலித்தெழுந்த தேர்ப்பாட்டு!
மோதலால் பழமையுடன்
முற்றிலும் கூர்ப்பாட்டு!
ஓதலால் மேடைதொறும்
ஓங்கிடும் ஊர்ப்பாட்டு!

பாண்டியன் பரிசுபோல்
பாவியம் ஒன்றெழுத
ஈண்டிங்கே யாருளார்?
இருட்டறையில் உள்ளதடா
வேண்டாத உலகமென
வெகுண்டெழுந்து விருத்தத்தில்
தீண்டாத மதக்கொடுமை
தீயிட்டுப் பகுத்தறிவைத்
தூண்டியவர், தன்மானச்
சுடரினை ஏற்றியவர்!
ஆண்டுகள் பலவாக
அறியாமை பெற்றுவளர்
ஆண்டவன் கற்பனைகள்
அகன்றிங்கே
அறிவுதான்
நீண்டிலக வேண்டுமென
நெய்தபல பாடல்கள்
பூண்டல்ல, புல்லல்ல,
புரட்சித்தீப் பூக்களன்றோ!

சஞ்சீவி பருவதத்தின்
சாரலிலே வருகின்ற
வஞ்சிபோல் பெண்ணுலகம்
வடிவெடுத்தால்
துஞ்சுநிலை போய்விடும்;
துயரங்கள் மாய்ந்துவிடும்
அஞ்சாமை பெண்களுக்கு
அணிகலன்கள்
ஆய்விடும்,
வஞ்சகம் அறியாமை
மடமைகள்
தீய்ந்துவிடும்!

ஒவ்வொரு பாட்டுமே
உலகுணரக் காட்டுமே!
செவ்விய கருத்துகள்
சிந்தனையில் கூட்டுமே,
தெவ்வரை அறியவைத்துத்
திசைமூலை ஓட்டுமே,
வவ்விட நினைக்கின்ற
வடவரை ஆட்டுமே!
கவ்வியே நெஞ்சினில்
களிப்பினை ஏற்றுமே!

கற்பனையில் கருத்தினில்
காவிய அமைப்பினில்
சொற்களின் ஆளுகையில்
துடித்தெழும் உணர்ச்சியில்
பற்பல மாற்றங்கள்,
பைந்தமிழ்க்கு ஏற்றங்கள்!

சிற்பத்தின் நுட்பங்கள்,
சீரெழில் ஓவியத்தின்
முற்படும் வண்ணங்கள்,
மூலமுதல் எண்ணங்கள்!
எற்றைக்கும்
புராணங்கள்
இதிகாசம் இடம்பெறாத்
தற்புதுமைப் புனைவுகள்,
தமிழ்மரபின்
உவமைகள்;
விற்படும் அம்புகள்
விரைந்தோடற் போலவே
பொற்படும் சொற்களே,
புரட்சியின் நெற்களே!
கற்பதற்கு இனியவை,
காலத்திற் புதியவை!

புயலெழும் பாட்டுகள்
புனைந்தவர் என்றாலும்
குயிலெழும்,
கூடவே
குற்றால அருவியெழும்,
மயிலெழும் மழையெழும்
மார்கழிக் குளிரெழும்
துயிலெழும் கதிரவன்
சுடரெழும், நிலவெழும்,
கயலெழும்
வளர்ந்தோடும்
காவிரியின் நீரெழும்,
கயமெழும், பூவெலாம்
கமழ்ந்தெழும்,
வெயிலெழும், மாற்றாக
வீசுகிற தென்றலெழும்,
வயலெழும்,
பைம்பயிர்
வண்ணங்கள்
பலவெழும்,
முயலெழும்
ஓட்டமும் முழுதெழும்,
குயவன்செய் கவினுருக்கள்
குவிந்துயிர் கொண்டெழும்,
நயமெழும்,
பாட்டெனும் நரம்பிலே
இரும்பெழும்!

பாரதியின் மீதிருந்த
பற்றாலே பெயரினைப்
பாரதிதாசனெனப்
பதிந்துகொண்ட போதிலும்
நீரதிகம் அவர்புகழை
நெடுகவே பரப்பினும்
பாரதம் என்றவர்
பாடியே ஆடிட
நீரதில் மாறுபட்டீர்
நிற்குமிடம் வேறுபட்டீர்
ஆரியம் திராவிடம்
அடிப்படையில் தனியென்றீர்
சீர்திருத்த இயக்கமாம்
திராவிடக் கவிஞர்நீர்!

கோட்டையின் நாற்காலி
இன்றுண்டு
நாளையே
கொண்டுபோய் விடுவான்நல்
திராவிடக் காளையே/
பாட்டிலே பாடியது
பாரிலே மெய்யாகி நாட்டிலே
அண்ணாவே
நல்லாட்சி தொடங்கினார்,
கோட்டைதான் திராவிடக்
கொற்றமாய் ஆனதன்றோ!

மொழி,இனம் நாடென்றால்
மூண்டெழும் உணர்ச்சிதான்
வழிந்தோடத் தீட்டியவை
வல்வீரம் ஊட்டுபவை
இழிமொழிகள்
திணிப்புகளை
எதிர்த்திங்கே
ஓட்டுபவை,
விழிதிறந்து தமிழர்கள்
வெற்றியுறக் காட்டுபவை!

செழித்தமொழி
வளமான
செந்தமிழ்க் கெதிரான
இந்திமொழித்
திணிப்பெதிர்க் கும்
எழுச்சிமனம் இன்றுவரை
செந்தமிழ் நாட்டிலே
தீயாக வளர்வதற்கு
முந்துகிற வேகத்தை
மூட்டுமவர் பாட்டுகள்!
எந்தநிலை என்றாலும்
இருட்சிறையே இட்டாலும்
செந்தமிழைக் காப்பதன்றிச்
செயலென்ன வேறென்று
வெந்தழல் மூட்டியவர்;
வீரப்பண் மீட்டியவர்!

பேராசிரியர்
**மா.செல்வராசன்**

வடக்கென்றும் ஒவ்வாது,
வாடைமுதல் ஒவ்வொன்றும்
இடக்காகும் என்றவர்,
இன்றுவரை அவ்விடர்கள்
கடப்பதொரு போராகக்
காலமெலாம் எழுகிறது,
கிடப்பதொரு முள்ளெனினும்
கீறாமல் விட்டிடுமோ?
தடுப்பதொரு கல்லெனினும்
சாய்க்காமல் நின்றிடுமோ?
எடுப்பதொரு கடமையென
இளந்தமிழர் உரிமையென
முடிப்பதுதான் வேலையென
முழங்குகின்ற தளபதி
கொடுப்பதோர் அடியெனினும்
குலுங்கிடுதே கொடுங்கோலும்!
விடுப்பதொரு செய்தியவர்
விடுதலையே ஒருதலை!

இன்றெழும் பிறந்தநாள்
இனியதமிழ் நிறைந்தநாள்!
நன்றவர் பாடல்கள்
நல்லுணர்ச்சிக் கூடல்கள்!
அன்றண்ணா சொன்னதுண்மை
அரும்பெருந் திராவிடத்தின்
நின்றொளிரும் கவிஞரவர்,
நிலையான கனலுமவர்,
மன்றெழும் பாட்டுகள்
மாற்றார்க்கு
வேட்டுகள்
என்றுரைத்த கலைஞர்சொல்
என்றுமெழும் கவிதைநெல்!
வென்றெழும் தமிழரெலாம்
விழாவெடுத்துக்
கொண்டாடும்
ஒன்றவர் பிறந்தநாள்;
உலகிலொரு சிறந்தநாள்!
இலகிடும் காலமெலாம்;
இசைத்திடும் ஞாலமெலாம்!



பகரைன் வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கம் (NRTIA) "உறுப்பினர்களின் தொகுதிகளில் களப்பணி என்ற தலைப்பில் கலந்துரையாடல் கூட்டம் நடத்தப்பட்டது. பொதுச் செயலர் மன்னை முபாரக் கூட்டத்தை ஒருங்கிணைத்து தொகுத்து வழங்கினார். பொறுப்பாளர் முகம்மது உசைன் மாலிம் தலைமை உரையாற்றினார். ரவிச்சந்திரன். சங்கீதா பாபு. கபீர் அகமது. சுல்தான் இப்ராஹிம். திருமேனி.குடந்தை ஆரிப். சதீஷ்குமார்.சர்புதீன். பிரபாகரன். மணிவண்ணன்.ஆபித். அசோக் குமார். குளச்சல் சபிக். டேவிட் .லலித். இப்ராஹிம். பகுருதீன். ஹக்கீம். சிதம்பரம்.மணிமாறன்.காதர். ஆசாத் மைதீன். ஏ சாகுல் ஹமீத்.சாகுல் ஹாஜா. மீரான் மைதீன். யூசுப் தீன். அக்பர் அலி. வல்லம் முகமது ஆரிப். வல்லம் பாரூக். மாரிதாஸ். அல்லா பிச்சை. மாலிக் முகமது. முகமது அபுபக்கர். ஜெகபர் சாதிக். கேசவன். சங்கர் தாஸ். செந்தில். வெங்கடேசன் .மற்றும் நிர்வாகிகள் அனைவரும் இதில் கலந்து கொண்டார்கள்